மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ம் நாள் வியாழக்கிழமை

இ.மஎண்.08/2023
உள்
அசல் வழக்கு எண்.59/2017
--------

1. கருப்பாயம்மாள்
2. இராமச்சந்திரன் ஆசாரி (இறப்பு)
3. ஆர்.முருகன்
4. எஸ்.வேலம்மாள்
5. எஸ்.மூர்த்தியம்மாள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதி
மாவட்ட ஆட்சியர் மூலம்
விருதுநகர் மாவட்டம்.
2. மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் ஆவணம்
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
4. வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர்
5. வட்டாட்சியர், வெம்பக்கோட்டை வட்டம்
விருதுநகர் மாவட்டம்
6. ஆணையாளர் வட்டார வளர்ச்சி அலுவலர்
வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
7. இராவனேஷ்வரன்
8. ஜெயகுருநாதன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு 17.11.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 28.03.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 7 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.காளிதாஸ் அவர்கள் ஆஜராகி

எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதிகள் 75, 76ன் கீழ் இம்மனுவினை ஏற்று மனுவில் கண்டுள்ள காரணங்களினால், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வாதிகள் தரப்பு சாட்சியாக ஆவணங்களை கொண்டு வந்து விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 15.11.2023ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

தாவா சொத்து புஞ்சை நிலங்கள் ஆகும். தாவா சொத்தில் விவசாய பணிகளுக்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை இருப்பதாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு தவறானது என்றும், தாவா சொத்துக்கில் பாதை இல்லை என்றும், பாதை வாதி சொத்துக்கு மேற்கில் தான் உண்மையான வண்டிப்பாதை உள்ளது என்றும்,. அது வாதி சொத்தில் மேற்புறம் ஓடையாக உள்ளது என்றும், வாதிகள் சொத்துக்கு மேற்கிலும் சங்கரபாண்டியபுரம் எல்லை கல்லுக்கும் இடையில் உள்ள ஓடை தான் வண்டிப்பாதை எனவும், மேற்படி வண்டிப்பாதை வடக்கில் ஏழாயிரம்பண்ணை–சங்கரன்கோவில் சாலையில் இருந்து தெற்காக சங்கரபாண்டியபுரம் மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்குள் சென்று அதன் பின் ஓடை வழியாக வாதி சொத்துக்கு வந்து வாதி சொத்துக்கு மேல்புறம் ஓடை வழியாக தெற்கு நோக்கில் சென்று பின்னர் கிழக்காக சென்று ஊத்துப்பட்டி கிராமம் வரையிலும் சென்று சிப்பிப்பாறை காட்டுப்பாதையில் சேர்ந்து செல்கிறது. தாவா சொத்தில் எந்தவித வண்டிப்பாதையும் இல்லை. அவ்வாறு வண்டிப்பாதையை காட்டப்பட்டுள்ளது தவறாகும். ஏழாயிரம்பண்ணையில் இருந்து சங்கரன்கோவில் செல்லும் தார்ச்சாலையில் இருந்து தெற்காக 7வது 8வது

பிரதிவாதிகள் ராஜலட்சுமி என்ற பட்டாசு தொழிற்சாலை கட்டியுள்ள சேர்வைக்காரன்பட்டி கிராமம் புஞ்சை சர்வே எண்.35/2 மற்றும் 35/6 ல் உள்ள சொத்துக்கு சுமார் 2 கி.மீ. வரை ஓடை வழியாக சென்று மனுதாரர்கள சொத்தான சர்வே எண்.14/1, 14/2 ல் இருந்து மேல்புறம் உள்ள ஓடை வழியாக செல்லாமல் சொத்தில் நடுமையனம் செல்வது போல் பாதை காட்டப்பட்டுள்ளது. உண்மையில் தாவா சொத்தில் பாதை இல்லை. வாதிகள் சொத்துக்கு மேற்கில் தான் உள்ளது. முந்திய பத்திரங்களிலும் பாதை வாதிகள் சொத்துக்கு மேற்கில் இருப்பதாக கண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உண்மைகளை அரசு ஆவணங்களில் மறைத்தும், மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்ட பின்னரும் மேற்படி ஆட்சேபணை தொடர்பாக எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் ஒருதலைபட்சமாக தொழிற்சாலை தொடங்குவதற்கு மேற்படி ராஜலட்சுமி பட்டாசு தொழிற்சாலை அமைந்துள்ள சொத்தான சேர்வைக்காரன்பட்டி கிராமம் புஞ்சை சர்வே எண்.35/2 மற்றும் 35/6 ல் உள்ள சொத்துக்கு செல்வதற்கு ஏழாயிரம்பண்ணையில் இருந்து சங்கரன்கோவில் செல்லும் ைஹவேஸ் ரோட்டில் இருந்து சங்கரபாண்டியபுரம் கிராம மேல்நிலைப்பள்ளி வளாகம் வழியாக சங்கரபாண்டியபுரம் கிராம எல்லையை கடந்து பின்னர் சேர்வைக்காரன்பட்டி கிராம சொத்துக்கள் வழியாக செல்கிறது. மேற்படி பாதை மேல்நிலைப்பள்ளியை கடந்த செல்வதற்காக செல்லும்போது சுமார் 5 அடி உயரம்உள்ள ஓடை வழியாக சென்று மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.14/1, 14/2 வழியாக செல்வதாக தவறுதலாக அரசு ஆவணங்களில் வண்டிப்பாதை என்று காட்டப்பட்டுள்ளது. மேற்படி வண்டிப்பாதை மனுதாரரின் சொத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஓடை வழியாகத்தான் செல்கிறது என்பதை காட்டுவதற்கும், 7 வது, 8 வது எதிர்மனுதாரர்கள் ஓடையையும், விளை நிலங்களையும் பட்டாசு தொழிற்சாலைக்கு சட்ட விரோதமாக காட்டி அரசு அதிகாரியை ஏமாற்றி உரிமம் பெற்றுள்ளதை காட்டுவதற்கும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சமர்ப்பித்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால்சரியான விதிகளின்படி உரிமம் வழங்கப்பட்டுள்ளதால் என்று மற்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று பெறப்பட்டதா என்பது தெரியவரும். எனவே, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களோ அல்லது அவர்கள் நியமனம் செய்யும் சாட்சி கூற தகுதி வாய்ந்த அலுவலர் மூலமாகவோ, வெம்பக்கோட்டை தாலுகா, சேர்வைக்காரன்பட்டி

புலப்படம் "அ" பதிவேடு, சிட்டா அடங்கல் மற்றும் அடங்கல் சகிதம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்து சாட்சி கூறும்பட்சத்தில் பட்டாசு தொழிற்சாலைக்கு ஆலை உரிமம் பெற்ற உரிமைதாரர் பாதை மற்றும பாதை அமைந்துள்ள அமைப்பு, சரியான விதிகளின்படி ஆலைக்கு பாதை வசதி உள்ளதா என்பது பற்றி உண்மை நிலைய நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.08/2023ல் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் விசாரணை முடிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணையின் போது பாதை குறித்து எந்த தெளிவான விளக்கமும் தெரிவிக்காமல் இருந்துவிட்டு தற்போது தாவா மனுவில் புதிய புதிய விளக்கங்களை கூறி வருகிறார். ஸ்தலத்தில் உள்ள பாதையை மறைத்தும், புதியதமாக இல்லாத ஒரு இடத்தில் பாதை இருப்பதாக நீதிமன்றத்தை நம்ப வைக்க வேண்டி புதிய சங்கதிகளை கூறி வருகிறார். மனுதாரர் மனுவில் கூறியுள்ளது அனைத்தும் பொய்யானவைகள் ஆகும். மனுதாரர் வரவழைக்கக்கோரும் மனு குறித்து உரிய அலுவலரிடம் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனு தாக்கல் செய்யப்படாததை எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழங்கிட மறுத்திருக்க வேண்டும். அதுபோல எந்த மனுவும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து தாவா மனுவில் தெரிவிக்கவும் இல்லை. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **தீர்வு:–**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வாதிகள் தரப்பு சாட்சியாக ஆவணங்களை கொண்டு வந்து விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 15.11.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை நிரூபணம் செய்வதற்காக அவரது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க அனுமதி வழங்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். தவறும்பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வாதிகள் தரப்பு சாட்சியாக ஆவணங்களை கொண்டு வந்து விசாரணை செய்ய அனுமதி வழங்கி

உத்தரவிடக்கோரி 15.11.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.08/2023
உள்
அ.வ.எண்.59/17
<u>உத்தரவு</u>
நாள்– 25.04.2024